# தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பாசறை

ஜூன் 2020
திபி 2051 . மலர் 2 . இதழ் 6

## செய்தி மடல்




நாம் தமிழர் கட்சி

# பதிப்புரை

எதிரிகளை மன்னிக்கலாம் ஆனால், ஒருபோதும் மறக்கக்கூடாது. மே 18 ஒவ்வொரு ஆண்டும் அதைத் தான் அறிவுறுத்துகிறது.

வரலாற்றை அடுத்தத் தலைமுறைக்குக் கடத்துவதும் நிலை நிறுத்துவதும் மிக முக்கியம். ஒற்றையாளாக இருந்தாலும் நாம் தமிழர் அதைச் செய்யும்.

கொரோனா பெருந்தொற்று உலகை அச்சுறுத்தி வரும் நிலையில் நம் வளர்ச்சியையும் கேள்விக்குள்ளாக்கி வருகிறது. அரசுகளின் செயல்பாடுகள் திருப்தியளிக்கும் வகையில் இல்லை. நாம் ஒற்றுமையாக கைகோர்ப்பதே ஒரே வழி.

கைகோர்போம். களமாடுவோம்.

ஆசிரியர் குழு

## இவ்விதழில்


1. சீனாவும் தற்சார்பு பொருளாதாரமும்
2. கொரோனாவும் அரசுகளும்
3. நிகழ்வுகள்
4. மக்கள் களம்


“எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது."

\- தலைவர் பிரபாகரன்

சீனா, இந்திய எல்லையில் நடத்திய நிகழ்விற்குப் பிறகு சீனத் தயாரிப்புப் பொருட்கள் புறக்கணிப்பில் வலதுசாரிகள் ஆவேசமாக பேசி வருகின்றனர். அதற்கு அவர்கள் அளிக்கும் ‘அறிவுப் பூர்வமான’ விளக்கம், சீனப் பொருட்களைப் புறக்கணித்த அடுத்த நொடி இந்தியப் பொருட்கள் உற்பத்தி அதிகரிக்கும், சீனாவிற்கு இந்தியாவிலிருந்து செல்லும் பணம் நிற்கும். சீனா பொருளாதார ரீதியாக பெரும் பின்னடைவை சந்திக்கும்.

சீனாவின் பொருளாதாரத்தில் இந்திய ஏற்றுமதியின் பங்கு ஒரு புறமிருக்க, வலதுசாரிகளின் இந்த ‘புறக்கணிக்கும் ஐடியா’ எந்த அளவில் இந்தியாவிற்கு உதவும் மற்றும் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை கொஞ்சம் பார்ப்போம்.

**சீனாவின் பெரும் தாவல்**

எழுபதுகளில் இந்தியாவைவிட சீனா, பெரியளவில் முன்னேறி இருக்கவில்லை. டென் சியோபிங் காலத்தில் சீன அரசு சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அனுமதித்தது. குறைந்த கூலி, குறைந்த மாசுக் கட்டுபாடு விதிகள் போன்ற காரணங்களுக்காக மேலை நிறுவனங்கள் சீனாவிற்கு தங்கள் நிறுவனங்களை நகர்த்தத் தொடங்கின. உலகின் பெரும் தொழிற்சாலையாகிப்போனது சீனா.

அதே நேரத்தில், திட்டமிட்டு பொருளாதாரத்தைக் கட்டமைக்கத் துவங்கியது. சீனாவில் தொழில் தொடங்கும் நிறுவனங்களில், சீனக் கம்பெனிகளின் முதலீடும் இருக்கும்படி பார்த்துக் கொள்ளப்பட்டது. கிடைத்த வளத்தையும் உள்கட்டமைப்பு வசதிகளாகவும், மக்கள் நலமாகவும் மாற்றியது. 2000 இற்குப்பிறகு அசுர வளர்ச்சிப் பெற்ற சீனா, ஆய்விற்கும் புதிய தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் பெரும் முக்கியத்துவம் கொடுக்கிறது. இன்று வல்லரசாக நிற்கிறது.



**அறிவகத்தின் இன்றைய நிலை**

**எங்கு தவறவிட்டது இந்தியா?**

இந்தியா 90களில் உலகக் கம்பெனிகளுக்குக் கதவை திறந்துவிட்டது. இந்தியாவும் பெரும் பொருளாதார வளர்ச்சியைக் கண்டது.

எனினும் சீனாவின் வளர்ச்சிக்கும் இந்தியாவின் வளர்ச்சிக்கும் பெரும் வேறுபாடு ஒன்று உண்டு. சீனா தன் செல்வத்தை உள்கட்டமைப்பாகவும், மக்கள் வளமாகவும் மாற்றியது. இங்கு வளர்ச்சி தனி நபர் கைகளில் போய் சேர்ந்தது. குசராத் முதலாளிகளே இதற்கு சாட்சி.

கல்விக்காகவும் மருத்துவத்திற்கும் சீனா செலவிட்ட தொகையில் சிறிய அளவு கூட இந்திய அரசு செலவழிக்கவில்லை. ஒட்டுமொத்தமாக மாநிலங்களின் தலையில் சுமையை ஏற்றிவிட்டு நழுவிவிட்டது. படித்த, உடல்நலமுள்ள மக்கள் இல்லாமல் எவ்வாறு வளர்ச்சி அடைய முடியும்?

வருடத்திற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4% ஆய்வுக்காக சீனா செலவிட்டு வரும் நிலையில் இந்தியா 0.5% தாண்டவில்லை. சீனா மிகப்பெரும் அளவில் உள்நாட்டு நிறுவனங்களுக்க ஊக்கமளித்து, எண்ணற்ற தனியார் நிறுவனங்களை நிறுவ உதவியது. இவை இன்று உலகிலேயே அதிகமான அறிவுசார் சொத்துகளைக் கொண்டுள்ளது.

இந்தியாவில் இந்த மாற்றம் இன்னும் ஆரம்பிக்கவே இல்லை. இங்குள்ள பெரும் தனியார் நிறுவனங்கள் இங்கிருப்பதை பிடுங்கி சம்பாதிக்க விரும்புகின்றனவே தவிர, புதிய தொழில்நுட்பங்களை உருவாக்க முனைப்புக் காட்டுவதில்லை. மிஞ்சி ஒன்றிரண்டு ஆரம்பிக்கப்பட்ட போதும், இந்திய அரசின் தவறான கொள்கைகளால் அழிக்கப்பட்டுவிட்டன. இந்தியர்கள் ஆரம்பித்த பிளிப்கார்ட்டின் தலைமையகம் இன்று சிங்கப்பூரில்.

**தவறான நடுவண் அரசுக் கொள்கைகள்**

1970 களில் எல்ஹெச்பி ரயில் பெட்டிகள் வாங்கப்பட்டபோது, கூடவே தொழில் நுட்பமும் வாங்கப்பட்டது. அதை வைத்துத்தான் இன்று சதாப்தி, துரந்தோ பெட்டிகளைத் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால். இவ்வளவு மெட்ரோ ரயில்கள் வாங்கியும் இந்திய நிறுவனம் எதனிடமும் அதன் தொழில்நுட்பம் இல்லை. அவ்வளவு ஏன், ட்ரெயின்18 போன்ற திட்டங்களும் கூட முடக்கப்பட்டுவிட்டன.

காவேரி எஞ்சினோ 30 ஆண்டுகளுக்கும் மேல் தயாரிப்பிலே இருக்கிறது. இந்தியா வளர்வதைவிட தனிநபர்கள் வளர்வதே இந்திய அரசுக்கு முக்கியமாக தோன்றுகிறது போலும்.

இந்தியாவில் வெவ்வேறு மாநிலங்கள் வெவ்வேறு வளர்ச்சி நிலையில் உள்ளன. எனினும், ஒரே கொள்கையை வைத்துக் கொண்டு, அனைத்து மாநிலங்கள் மீதும் அழுத்த நினைக்கிறது ஒன்றிய அரசு.

**புறக்கணித்தல் எப்படி உதவும்?**

மரம் நடாமல் கனியை எதிர்பார்க்கும் கதை இது. தேவை எங்கிருக்கிறதோ அது ஏதாவதொரு விதத்தில் நிறைவு செய்யப்படும். சீனப் பொருட்களை தடை செய்து, இந்தியாவில் அதன் உற்பத்தி இல்லையென்றால், அது வேறுவிதமாக இந்தியா வரும். ஏற்கெனவே, மிளகை வைத்து சிங்களவர் செய்த தில்லுமுல்லு நாம் அறிவோம். இன்றும் சீனப்பொருட்கள் பலவும் எப்படி சௌகார்பேட்டையை அடைகின்றன என்பதும் நாம் அறியாததல்ல. உற்பத்திப் பொருட்கள் தவிர்த்து, பல தொழிலகங்களும் கூட மூலப்பொருட்களையும் சீனாவிலிருந்தே இறக்குமதி செய்கின்றன. எனவே, இது நடைமுறையில் பெரும் பலனை அளிக்காது.

**என்ன செய்ய வேண்டும்?**

கல்வி நிறுவனங்களை பலப்படுத்த மாநில அரசுகளுக்கு அதிக நிதியை ஒன்றிய அரசு ஒதுக்க வேண்டும். கல்வி நிறுவனங்களை பணம் காய்க்கும் மரங்களாகப் பார்த்து, தனியார்மயப்படுத்தலை நிறுத்த வேண்டும்.

வேளாண்மை தொடங்கி விமானம் வரை ஆய்வுக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும். ஆய்வில் ஈடுபடும் தொடக்கக்கால நிறுவனங்களுக்கு சலுகைகள் அளிக்கப்பட வேண்டும், ஊக்குவிக்கப்பட வேண்டும்

இதெல்லாம் விட முக்கியம், மாநில அரசுகளுக்கு பொருளாதார அதிகாரம் வழங்குதல்.

நீண்ட கால அடிப்படையில் இவற்றைச் செய்யும்போதுதான், இந்தியா உண்மையான வளர்ச்சியைப் பெற முடியும், சொந்த காலில் நிற்க முடியும்..

இந்திய மாநிலங்களில் இரண்டாவது அதிக கொரோனா பாதிப்புள்ள மாநிலமாக தமிழகம் ஆகியுள்ளது.

குறிப்பாக சென்னையில் பரவல் கவலைத் தரும்படியாக உள்ளது.

மூன்று மாதத்திற்கும் மேலாக முடங்கியிருக்கிறது தமிழகம். எனினும், பாதிப்பு பெருகிக் கொண்டே போகிறது. மருத்துவப் பணியாளர்களும் காவல் துறையினரும் மிகுந்த அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

**லாக்டவுன் தான் தீர்வா?**

ஊரடங்கு கொரோனாவிற்கான மருந்தல்ல. அது பரவலை சற்று ஒத்திப்போடும் காலம் தாழ்த்துவதே. நமது அரசுகள் அதை ஏதோ மருந்தைப் போல செயல்படுத்தி வருகின்றன.

உண்மையில் நாம் கேட்க வேண்டிய கேள்வி, இந்த மூன்று மாதங்களில் அரசு என்ன செய்திருக்கிறது என்பது தான்.

கொரோனா தொற்றில் மிகவும் அபாயகரமானது, மிக வேகமானப் பரவலின் காரணமாக நோயாளிகள் அனுமதிக்கப்பட முடியாத அளவு பொது சுகாதர அமைப்பு சீர்குலைந்து போவது. வளர்ந்த நாடுகள் இந்நிலையில் திணறிப் போயின.

சீனா பத்தே நாட்களில் மிகப்பெரும் மருத்துவமனைகளைக் கட்டும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது.

இத்தகைய நிலையை எதிர்கொள்ள, நம் அரசு தயாராக இருக்கிறதா?

கல்லூரி போன்ற பொதுக் கட்டிடங்களை எடுத்து வட்டத்திற்கு 1000 படுக்கைகளை உருவாக்கியிருந்தாலும் இந்நேரம் 3 இலட்சம் படுக்கைகளை உருவாக்கியிருக்க முடியும். செய்தனவா நம் அரசுகள்?

குடும்பத்திற்கு 1000 ரூபாய் கொடுக்கும் அரசு எவ்வளவு பாதுகாப்பு முகமூடிகளை மக்களுக்குக் கொடுத்தது?

அவ்வாறே, சிறுகுறு நிறுவனங்கள் இன்று அழிந்துபோகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அதற்காக என்ன செய்திருக்கின்றன அரசுகள்?

பல குடும்பங்கள் உணவின்றி தவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

சரியான திட்டமோ, வழிமுறையோ அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை. மற்ற நாடுகளின் தவறுகளிலிருந்தும் கற்றுக் கொள்ளவில்லை. இதுவே பெரும் கவலையளிக்கிறது.

**என்ன செய்ய வேண்டும்?**

ஊரடங்கை நீட்டித்துக் கொண்டேப் போவது தீர்வல்ல. கொரோனா தடுப்பு மருந்து ஏதாவது அதிசயம் நாடந்தாலொழிய இன்றோ நாளையோ வந்துவிடப்போவதில்லை. இந்த எதார்த்தத்தைப் புரிந்து கொண்டு அரசு செயலாற்ற வேண்டும

சென்னையை மட்டும் தனிமைப்படுத்தி முறையான அனுமதியை நிறுத்தி வைத்ததால், பயத்தில் மக்கள் முறையற்ற வழிகளில் சென்றனர். இதுவே, இப்போது தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும் நோய் தொற்று பரவியிருப்பதற்கு முக்கிய காரணம். முறையாக சோதனை செய்து முடிந்துவரை சொந்த ஊருக்கு அனுப்பி வைப்பதே இப்போது உதவும்.

வாய்ப்புள்ள நிறுவனங்களை சென்னையிலிருந்து பிற மாவட்டங்களுக்கு நகர்வதை ஊக்குவிக்கலாம். எடுத்துக்காட்டாக தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு பொறியியல் கல்லூரிகளில் தற்காலிகமாக அலுவலகம் அமைக்க அனுமதி கொடுக்கலாம். சிறுகுறு நிறுவனங்கள் தொழிலகம் அமைக்க நிதி உதவி செய்ய வேண்டும்.

மக்களிடம் பணப்புழக்கம் அதிகரிப்பதை உறுதிசெய்ய தமிழக சிறுகுறு நிறுவனங்களுக்கு அரசு புதிய உற்பத்தி வாய்ப்புகளைக் கொடுக்க வேண்டும் எடுத்துக்காட்டாக, தமிழகப் போக்குவரத்துத் துறைக்குப் புதிய பேருந்துகள் வாங்குதல், புதிய கட்டிடங்கள் கட்டுதல் போல.

கிராமங்களுக்கு இருப்பது போல, நகர்ப்புற ஏழைகளுக்கும் குறைந்தபட்ச வேலை நாட்களை உறுதிசெய்ய வேண்டும்.

வேளாண்மை தடைபடாமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

அரசுகள் இவற்றை செய்யும் என நம்புவோம்.


ஐ.நா. மன்றம் சார்பில் நேற்று (சூன் 23) கொண்டாடப்பட்ட,
பொதுச்சேவை நாள் காணொளி அமர்வில்,
கேரள சுகாதாரத்துறை அமைச்சர்
கே.கே.ஷைலஜா அவர்கள்
சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றதையும், கொரோனா நோய்த்
தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தி உயிரிழப்பையும்,
பாதிப்பையும் குறைத்த கேரள அரசுக்கு பாராட்டுத்
தெரிவிக்கப்பட்டதையும் அறிந்து மகிழ்கிறேன்.
கேரள அரசு இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு மட்டுமின்றி,
உலகின் பல நாடுகளுக்கும் முன்னுதாரணமாக திகழ்கிறது.
தங்களின் மக்கள் பணி மேன்மேலும் சிறக்க
எமது வாழ்த்துகளும்! பாராட்டுகளும்!!
செந்தமிழன் சீமான் தலைமை ஒருங்கிணைப்பாளர், நாம் தமிழர் கட்சி
SeemanOfficial www.naamtamilar.org



தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பாசறை

நாம் தமிழர் கட்சி